# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2018 ஒக்டோபர் மாதம் 23 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை**

**III.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**IV.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**V.** **மனுக்கள்**

**VI.** **கேள்விகள் / இடைக்கால கேள்விகள்**

**01.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2018.10.09 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)18/63)**

அ. மாகாண கல்வித் திணைக்களம் கொழும்பு ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் இருந்து ரன்மகபாயவிற்கு கொண்டுவர காரணமாகிய விடயங்கள் யாவை ?

ஆ. மாகாண கல்வித் திணைக்களம் இயங்கிய கிரீன்பாத் என்ற இடத்தில் அமைந்திருந்த கட்டடத்தின் உரிமை எவரின் கீழ் காணப்படுகின்றது ?

இ. ரன்மகபாயவில் மாகாண கல்வித் திணைக்களத்தை இயங்கச் செய்ய வாடகை செலுத்தப்படுகின்றதா ? அப்படியாயின் அதற்காக செலவாகும் நிதி எவ்வளவு ?

ஈ. தற்போது மூடப்பட்டுள்ள கிரீன்பாத் கல்வித் திணைக்களம் இயங்கிய இடம் எத் தேவைக்காக பயன்படுத்தப்படவுள்ளது ?

**02.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2018.10.09 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி: (Îæ/vi (1)18/64)**

அ. நீர்கொழும்பு நகர சபை அதிகார பிரதேசத்தின் கொச்சிக்கடையில் அமைந்துள்ள நாளாந்தம் சந்தை இயங்கும் கட்டடத்தின் பகுதி ஒன்று அவசரமாக உடைத்து அகற்றப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இதன் காரணமாக நாளாந்தம் வியாபாரத்தில் ஈடுபட்ட வர்த்தகர்களின் ஒரு பகுதியினர் பாரிய கஷ்டத்திற்கு மத்தியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட வேண்டியுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. இந்த நாளாந்தம் சந்தை இயங்கிய கட்டடத்தை புதிதாக நிர்மாணிப்பதற்கு ஏதாவது தாபனம் ஒன்று நிதியினை ஒதுக்கியுள்ளதா ? அப்படியாயின்

i. ஒதுக்கிய நிதி எவ்வளவு ?
ii. கட்டடத்தின் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதா ?
iii. அவ்வாறான நிர்மாணம் ஒன்று செய்வதாயின் அது எப்போது ஆரம்பிக்கப்படும் ?

ஈ. மேற்கூறிய நாளாந்த சந்தை இயங்கிய கட்டடத்தை உடைப்பதற்கு சபை கூட்டம் ஒன்றில் நகர சபை அங்கீகாரம் வழங்கியுள்ளதா ?

உ. மேற்குறிப்பிட்ட படி பொறுப்புள்ள தாபனம் ஒன்று மேற்கூறிய கட்டடத்தை உடைக்க அங்கீகாரம் வழங்கவில்லையாயின் அக் கட்டடம் எவரின் தேவைக்காக உடைத்து அகற்றப்பட்டது ?

ஊ. இக் கட்டடத்தை உடைத்து அகற்றியதனால் மக்களுக்கும், நாளாந்தம் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகளுக்கும் நிகழ்ந்துள்ள கஷ்டத்தினைத் தடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

எ. இல்லையாயின் ஏன் ?

- **சபை ஒத்திவைக்கும் வேளையில் கேட்கப்பட்ட கேள்வி**

**03.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2018.10.09 ஆந் திகதி சபை ஒத்திவைக்கும் வேளையில் கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)18/ADG - 06)**

அ. மேல் மாகாணத்தின் ஆளுநர் பதவிக்காக உத்தியோகபூர்வ இல்லம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதா ?

ஆ. எந்த இடத்தில் நிர்மாண நடவடிக்கை இடம்பெறுகின்றது ?

இ. மதிப்பிடப்பட்ட மொத்த நிதி எவ்வளவு ?

ஈ. நிர்மாண நடவடிக்கையை மேற்கொள்ளும் நிறுவனம் எது ?

உ. கட்டடம் எத்தனை மாடிகளைக் கொண்டது ?

ஊ. அத்திவாரத்திற்காக எவ்வளவு நிதி செலவு செய்யப்பட்டது ?

எ. அத்திவாரம் (Pile) செய்வதற்குக் காரணம் என்ன ?

**04.** **கௌரவ உபாலி கொடிகார உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2018.10.09 ஆந் திகதி சபை ஒத்திவைக்கும் வேளையில் கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)18/ADG - 07)**

அ. மேல் மாகாணத்தில் தற்போது எத்தனை ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன ?

ஆ. நியமனத்தைப் பெறாது நேர்முகப் பரீட்சையில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

இ. 2014.08.08 ஆந் திகதி வர்த்தமானி அறிவித்தலின் கீழ் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் எத்தனை பேர் ஆட்சேர்க்கப்பட்டனர் ?

ஈ. 2007 மற்றும் 2011 களில் 80 புள்ளிகளைப் பெற்ற எல்லோருக்கும் நியமனம் வழங்கப்பட்டிருந்தால் 2014 ஆம் ஆண்டு பரீட்சை நடாத்தப்பட்டு நான்கு வருட காலங்களினுள் இந் நியமனத்தை வழங்காமைக்குரிய காரணம் யாது ?

உ. மேல் மாகாணத்தில் 3000 ஐ விட அதிகமாக ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றதா ?

ஊ. அப் பற்றாக்குறைக்கு இந் நியமனங்களை வழங்க முடியாதா ? (நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றியவர்கள் )

எ. 2018.07.23 தொடக்கம் 2018.07.31 வரை நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்களுக்கு நியமனத்தை வழங்குவீர்களா ?

ஏ. 2014.12.27 ஆந் திகதி நேர்முகப் பரீட்சையில் தோற்றிய பட்டதாரிகளுக்கு ஏன் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கின்றீர்கள் ?

**05.** **கௌரவ சரத் பதிரண உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**

**(Îæ/vi (1)18/65)**

அ. கடந்த தினங்களில் அங்கீகரிக்கப்பட்ட குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் கல்வி அமைச்சின் விடயங்களுக்கு உரிய வேலைகள் ?

i. அங்கீகரிக்கப்பட்ட கேள்வி நடைமுறை,
ii. கேள்விகளுக்காக விண்ணப்பித்தவர்கள்,
iii. கேள்விகளுக்கு இணங்க தெரிவு செய்யப்பட்டவர்கள்,
iv. தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு கேள்வியினை வழங்குவதற்குரிய காரணம்,
v. மதிப்பிடப்பட்ட நிதி,
vi. டென்டர் வழங்கப்பட்ட நிதி,

தொடர்பான அறிக்கை ஒன்றினை பெற்றுக் கொடுப்பீர்களா ?

ஆ. இன்னும் டென்டர் வழங்கப்படாத செயற்றிட்டங்கள் யாவை ?

இ. கேள்வி நடைமுறைக்கு புறம்பாக மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் காணப்படுகின்றனவா ? அவை யாவை ?

**06.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/66)**

அ. மேல் மாகாணத்தின் பொதுச் சேவை கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றி ஓய்வு பெற்ற சேவகர்களுக்கு ஓய்வூதியச் சம்பளம் ஒன்று பெறும் முறை ஒன்று தயாரித்து காணப்படுகின்றதா ?

ஆ. எம் முறை ?

இ. மாகாண கூட்டுறவு அமைச்சின் கீழ் ஓய்வூதிய சம்பளத்தைப் பெற்றுக் கொடுக்குமாறு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளதா ?

ஈ. அவ் வேண்டுகோளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க இயலுமா ?

உ. வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் அதற்காக ஏற்பாட்டினை ஒதுக்க முடியுமா ?

ஊ. ஒதுக்க முடியுமாயின் 2019 வரவு செலவுத் திட்டத்தில் நிதியினை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுப்பீர்களா ?

எ. இல்லையாயின் ஏன் ?

**07.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/67)**

அ. ம/ப பிலியந்தளை போக்குந்தர பொதுச் சேவை கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதைய நிர்வாகத்தின் கீழ் இடம்பெற்றுள்ளது எனக் குறிப்பிடப்படும் நிதி மோசடி ஊழல் முறைகேடுகள் தொடர்பாக உங்களுக்கு, உங்கள் அமைச்சின் கீழ் காணப்படும் தாபனத்திற்கு முறைப்பாடொன்று கிடைக்கப் பெற்றுள்ளதா ?

ஆ. முறைப்பாட்டினை முன்வைத்தவர்கள் யார் ?

இ. குற்றச்சாட்டு யாது ?

ஈ. அது தொடர்பாக எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

உ. நடவடிக்கை எடுக்கப்படவில்லையாயின் காரணம் என்ன ?

**08.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/68)**

அ. 2014.08.08 ஆந் திகதி வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க 2014 மேல் மாகாணத்தின் பட்டதாரி ஆசிரியப் பரீட்சையில் சித்தியெய்தி ஆசிரிய சேவைக்கு ஆட்சேர்ப்பது இவ்வேளையில் எவ்வளவு புள்ளிகளின் எண்ணிக்கையில் குறித்த ஆட்சேர்ப்பு இடம்பெற்றுள்ளது என்பதனை சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஆ. 80 புள்ளிகளைத் தாண்டிய யாவரையும் ஆசிரிய சேவைக்கு ஆட்சேர்ப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. அவ் எண்ணிக்கை எவ்வளவு என்பதனை நீங்கள் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஈ. அப்படியாயின் எல்லோரையும் ஆசிரிய சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காக எவ்வளவு காலம் ஏற்படும் என்பதனையும் அதற்காக கடைப்பிடிக்கப்படும் நடைமுறை ஒழுங்கு விதி யாது என்பதனையும் சபைக்கு அறிவிப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**09.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)18/69)**

அ. கனேமுல்ல - கந்தான பிரதான வீதியில் புழுகஹகொட கலஹிடியாவைக்கு இடையே மேல் மாகாண சபையின் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மணிக்கப்படும் பாலத்தின் ஒப்பந்தக்காரர் யார் என்பதை இச் சபைக்கு அறிவிப்பீர்களா ?

ஆ. அப் பாலத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கை எப்போது ஆரம்பிக்கப்பட்டது எனவும், எவ்வளவு காலத்தில் வேலையை நிறைவு செய்ய முடியும் என்பதனையும் சபைக்கு அறிவிப்பீர்களா ?

இ. நாளாந்தம் அவ் வீதியைப் பயன்படுத்தி பெருமளவானோர் பயணத்தில் ஈடுபடுகின்றனர் என்பதனையும் இவ்வேளையில் அப் பாலத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கை மந்த கதியில் இடம்பெறுகின்றது என்பதனையும் நீங்கள் அறிவீர்களா ?

ஈ. அவ் வீதியைப் பயன்படுத்தும் மக்களை கஷ்டத்திற்கு உற்படுத்தாது விரைவாக அப் பாலத்தின் வேலையை நிறைவு செய்வதற்கு நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது?

உ. இல்லையாயின் ஏன் ?

## VII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## VIII. சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான தகவல்கள்

## IX. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும் / சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான பதில்கள்

## X. சபைக் கூட்டம்

<u>கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு</u> :

**பிரேரணை :**

இன்றைய தினம் (2018.10.23) ஆந் திகதி கலைந்து சென்ற பின் இச் சபை 2018.11.05 (திங்கள்) மு.ப. 09.30 க்கு கூட வேண்டும் என்பதுடன், 2018.11.06 (செவ்வாய்க் கிழமை) ஆந் திகதி சபைக் கூட்டம் நடைபெறாத தினம் ஒன்றாகக் கருதி செயற்பட வேண்டும்."

## XI. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01. கௌரவ யசபால கோறலகே - பிரதித் தவிசாளர் அவர்கள்**

இன்று காணப்படும் கல்வி கொள்கையினால் பாரியளவு கஷ்டத்திற்கு மக்கள் உட்பட்டுள்ளனர் என்பதனைக் குறிப்பிட வேண்டும். பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்க்கும் போது வகுப்பொன்றில் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கையை 45 இருந்து 35 வரை முறையே குறைக்கும் நடவடிக்கை ஒன்று காணப்படுகின்றது தற்போது வகுப்பொன்றின் பிள்ளைகளின் எண்ணிக்கை 7 இனால் குறைந்துள்ளது. அதற்குப் பதிலாக பாடசாலைகளில் ஒரு வகுப்பொன்றினை புதிதாக ஏற்படுத்தாமையானது சமூகத்தில் பாரிய அளவு பிரச்சினை ஏற்பட காரணமாகியுள்ளது என்பதனை கல்வி அதிகாரிகளும் அறியவில்லை இது தொடர்பாக கவனத்தைச் செலுத்தி இம் முறையின் மூலம் பாடசாலைகளில் ஒவ்வொரு வகுப்புக்களிலும் குறையும் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ற முறையில் புதிய வகுப்பு ஒன்றினை ஒவ்வொரு பிரிவிலும் ஆரம்பிக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றது.

**(பி/vi(1)18/06)**

**02. கௌரவ அஜந்த நிரோஷன் பாதுக்க அவர்கள்**

நுண் நிதிக் கடனை வழங்குவது தனியார் பிரிவுத் தாபனங்களினால் மிகவும் சூட்சமமான முறையில் மேல் மாகாணத்திலும், நாடு முழுவதிலும் இடம் பெறுகின்றது. குழுக்களுக்கான கடன் மற்றும் தனிப்பட்ட கடன் 40% வருடாந்த வட்டியின் கீழ் அறவிடப்படுகின்றது, அது பாரிய அளவு அநீதியான சுரண்டும் நடவடிக்கையாகும். இக் கடன் முறை தொடர்பாக மத்திய வங்கியின் மேற்பார்வை தற்போது போதுமானதில்லை ஆகையால் இந் நிலமை தொடர்பாக அதிகளவு கவனம் ஒன்றைச் செலுத்தி இவ்வாறான கடன் முறையை ஒழுங்குபடுத்துவதற்காக புதிய சட்டத்திட்டங்களை விரைவாக தயாரித்து நடைமுறைப்படுத்துமாறு இம் மேல் மாகாண மாகாண சபை நிதி அமைச்சிடமும் மத்திய வங்கியிடமும் வேண்டுகோள் விடுக்கின்றது. **(பி/vi(1)18/08)**

## XII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

**2018.10.10** ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,

பத்தரமுல்ல.